ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2261/53 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06
*2261/53 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

*ச.வ.பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட 321 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரோகித அபேகுணவர்தன,**
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2021, திசெம்பர் 29.*

**ஒழுங்குவிதிகள்**

*1. (1)* இவ்வொழுங்கு விதிகள் *2021* ஆம் ஆண்டின் *05* ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (வானொலித் தொடர்பாடல்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(2)* இவ்வொழுங்கு விதிகளின் நோக்கமானது, *1974* ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் IV, காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான *1988* ஆம் ஆண்டின் வரைவாவணம், மற்றும் அத்தகைய வரைவாவணத் துக்குச் செய்யப்பட்ட அடுத்துப் பின்னரான ஏதேனும் திருத்தம் வலுவுறுத்தப்படுவதற்குப் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

1A - G 35892 — 510 (2022/05)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பாகம் I**

**இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையனவாந்தன்மை**

*2. (1)* இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதிகள் *(2), (3)* மற்றும் *(4)* இன் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையவையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ளவையுமான கப்பல்களுக்கும் மற்றும் வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும் ஏற்டையனவாதல் வேண்டும்.

*(2)* (இவ்வொழுங்குவிதிகளில் "சமவாயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்)*1974* ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம் மற்றும் *1988* ஆம் ஆண்டின் வரைவாவணம் என்பவற்றில் வேறு வகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) போர்க்கப்பல்களுக்கும் படைக்குழுவினர் கப்பல்களுக்கும் ;

(அ) 300 முழு மொத்தத் தொன்னளவுக்குக் குறைவான சரக்குக் கப்பல்களுக்கும் ;

(இ) பொறிமுறை வழிவகைகள் மூலம் உந்தப்படாத கப்பல்களுக்கும் ;

(ஈ) தொன்மையான கட்டமைப்பைக் கொண்ட மரக்கப்பல்களுக்கும் ;

(உ) வியாபாரத்தில் ஈடுபட்டிராத பொழுதுபோக்கு உலாப்படகுகளுக்கும் ; அத்துடன்

(ஊ) மீன்பிடிக் கலன்களுக்கும்.

*(3)* வட அமெரிக்காவின் பெரிய ஏரிகளினுள்ளும் கனடா, கியுபெக் மாகாணத்திலுள்ள மொன்றியலில் சென்ட் லம்பேர்ட் லொக்கின் கீழ்ப்புற வெளிச்செல்வழியாகக் கிழக்கு வரை அவற்றின் தொடுக்கின்ற மற்றும் கிளையாற்று நீர்ப்பரப்புகளினுள்ளும் சமவாயம் வேறுவகையில் ஏற்புடையதாகும் இலங்கைக் கப்பல்கள் நீர்வழிப்போக்குவரத்தில் உள்ளபோது இவ்வொழுங்குவிதிகள் அத்தகைய கப்பல்களுக்கு ஏற்புடையனவாகமாட்டாது.

*(4)* இவ்வொழுங்குவிதிகளிலுள்ள ஏற்பாடெதுவும், இடர்ப்பாட்டிலுள்ள ஏதேனும் கப்பல், உய்வுப்படகு அல்லது எவரேனும் ஆள், அவர்கள்பால் கவனத்தை ஈர்ப்பதற்கும், அவர்களின் நிலைமையை அறியத்தருவதற்கும், அவர்கள் உதவி பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் கையாளுகையிலுள்ள எவையேனும் வழிவகைகளைப் பயன்படுத்துவதனைத் தடுத்தலாகாது.

*3. (1)*வழமையாகச் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபடாததும் ஆனால் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தனியொரு சர்வதேசக் கடற்பயணத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவைப்படுத்தப்படுவதுமான கப்பலொன்று, (இவ்வொழுங்குவிதிகளில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுள் எவற்றிலிருந்தும் விலக்களிக்கப்படலாம் :

ஆயின், கப்பலினால் பொறுப்பேற்கப்படவுள்ள கடற்பயணத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் போதியனவாகவுள்ள காப்புத் தேவைப்பாடுகளுக்கு அத்தகைய கப்பல் இணங்கியொழுகுதல் வேண்டும்.

*(2)* (அ) புதிய வகையினவான சிறப்புக்கூறுகளைக் கொண்டுள்ள ஏதேனும் கப்பலை, பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் அத்தியாயங்கள் II-I, II-2, III மற்றும் IV என்பவற்றின் பிரயோகம் தொடர்பான ஏற்பாடுகளுள் எவையும் அத்தகைய சிறப்புக் கூறுகளின் அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சியையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களில் அவை சேர்க்கப்படுவதனையும் பாரதூரமானமுறையில் தடைசெய்யக்கூடியனவாகவுள்ள அத்தகைய ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கப்பல்கள், பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் அவை எந்தச் சேவைகளுக்காக உட்கருதப்படுகின்றனவோ அந்தச் சேவைக்குப் போதியனவாகவுள்ளனவும், கப்பலின் ஒட்டுமொத்தக் காப்பை உறுதிப்படுத்தக்கூடிய அத்தகையனவாகவுள்ளனவும், கப்பல் செல்லவேண்டிய அரசுகளின் அரசாங்கங்களினால் ஏற்கத்தக்கனவாகவுள்ளனவுமான காப்புத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(ஆ) உபஒழுங்குவிதி *2* (அ) வின்கீழ் விலக்களிப்புகளை அனுமதிக்கின்ற பணிப்பாளர் தலைமையதிபதி, அவைபற்றிய விபரங்களையும் அவற்றுக்கான காரணங்களையும் (இவ்வொழுங்குவிதிகளில் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புக்கு அறிவித்தல் வேண்டும்.

4. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 7 முதல் 11 வரையிலான ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளிலிருந்து தனிப்பட்ட கப்பல்களுக்குப் பகுதியளவிலான அல்லது நிபந்தனையுடனான விலக்களிப்புகளை வழங்கலாம்:

ஆயின், :-

(அ) அத்தகைய கப்பல்கள் இவ்வொழுங்குவிதிகளின் 6 ஆம் ஒழுங்குவிதியின் பணிசார் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எல்லாக் கப்பல்களினதும் காப்புக்காகச் சேவையின் பொது வினைத்திறனின்மேல் அத்தகைய விலக்களிப்புகள் கொண்டிருக்கக்கூடிய விளைவைப் பணிப்பாளர் தலைமையதிபதி கணக்குக்கெடுத்திருத்தல் வேண்டும்.

(2) பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே உபஒழுங்குவிதி 1 இன்கீழ் விலக்களிப்பொன்று வழங்கப்படலாம் :-

(அ) காப்புத் தொடர்பான நிபந்தனைகள் சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 7 முதல் 11 வரையிலான ஒழுங்குவிதிகளின் முழுப் பிரயோகத்தையும் நியாயமற்றதாக்கும் அல்லது அவசியமற்றதாக்கும் அத்தகையனவாகவிருப்பின் ; அத்துடன்

(ஆ) விதிவிலக்கான சூழ்நிலைகளில், கப்பலானது கடற்பரப்புக்கு அல்லது கடற்பரப்புகளுக்கு வெளியே எந்தத் தனியொரு கடற்பயணத்துக்காகச் சாதனமிடப்பட்டுள்ளதோ அந்தக் கடற்பரப்புக்கு அல்லது கடற்பரப்புகளுக்கு வெளியே அந்தத் தனியொரு கடற்பயணத்துக்காகவும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒவ்வோராண்டிலும் சனவரி முதலாம் நாளுக்குப்பின்னர் இயன்றளவு விரைவாக, முன்னைய பஞ்சாங்க ஆண்டின்போது உபஒழுங்குவிதிகள் 1 மற்றும் 2 இன்கீழ் வழங்கப்பட்ட எல்லா விலக்களிப்புகளையும் காட்டுகின்றதும் அத்தகைய விலக்களிப்புகளை வழங்குவதற்கான காரணங்களைக் காட்டுகின்றதுமான அறிக்கையொன்றை ஒழுங்கமைப்புக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. (1) மூன்றாம், 4 ஆம் ஒழுங்குவிதிகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விலக்களிப்புகள், 2022 ஆம் ஆண்டு 01 மாதம் 06 ஆந் திகதிய 2661/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்.

(2) சமவாயத்தின் அத்தியாயம் IV இனால் தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரமொன்று அல்லது வகைசார்ந்த அங்கீகார மொன்று -

(அ) எழுத்திலிருப்பின் ;
(ஆ) அது பயனுக்குவரும் திகதியைக் குறிப்பிடின்; அத்துடன்
(இ) அதிற் குறிப்பிடப்பட்ட எவையேனும் நிபந்தனைகள் இணங்கியொழுகப்படின்

மட்டுமே செல்லுபடியாகவுள்ளது.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமான அறிவித்தல் கொடுப்பதன்மீது, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை அல்லது அங்கீகாரத்தை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

## பாகம் II

### பணிசார் தேவைப்பாடுகள், வானொலி நிறுவுகைகள் மற்றும் வானொலிச் சாதனங்கள்

6. ஒவ்வொரு கப்பலும் கடலில் இருக்கையில், பின்வருவனவற்றைச் செய்வதற்கு ஆற்றலுடையதாதல் வேண்டும் :-

(அ) சமவாத்தின் அத்தியாயம் IV இன் 8.1.1 மற்றும் 10.1.4.3 ஆம் ஒழுங்குவிதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, ஒவ்வொன்றும் வெவ்வேறு வானொலித் தொடர்பாடல் சேவையைப் பயன்படுத்தி ஆகக் குறைந்தது இரண்டு தனிவேறான மற்றும் சுதந்திரமான வழிவகைகள் மூலமேனும் இரண்டு தனிவேறான மற்றும் சுதந்திரமான வழிவகைகள் மூலமேனும் கப்பலிலிருந்து கரைக்கான இடர்ப்பாட்டு எச்சரிக்கைகளைக் கடத்துவதற்கும் ;

(ஆ) கரையிலிருந்து கப்பலுக்கான இடர்ப்பாட்டு எச்சரிக்கைகளைப் பெறுவதற்கும்;

(இ) ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்கு இடர்பாட்டு எச்சரிக்கைகளைக் கடத்துவதற்கும் பெறுவதற்கும் ;

(ஈ) தேடுகை மற்றும் மீட்பு ஒருங்கிணைத்தல் தொடர்பாடல்களைக் கடத்துவதற்கும் பெறுவதற்கும்;

(உ) சம்பவ இடத்திலான தொடர்பாடல்களைக் கடத்துவதற்கும் பெறுவதற்கும்;

(ஊ) கப்பலிருக்கும் இடத்தைக் கண்டறிவதற்கான சமிக்ஞைகளைக் கடத்துவதற்கும், சமவாயத்தின் அத்தியாயம் V இன் 19.2.3.2 ஆம் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கப்பலிலிருக்கும் இடத்தைக் கண்டறிவதற்கான சமிக்ஞைகளைப் பெறுவதற்கும்;

(எ) கடலோரக் காப்புத் தகவலைக் கடத்துவதற்கும் பெறுவதற்கும்;

(ஏ) சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 15.8 ஆம் ஒழுங்குவிதிக்கமைய கரையில் அமைந்துள்ள வானொலி முறைமைகள் அல்லது வலையமைப்புகள் என்பவற்றுக்கும் அவற்றிலிருந்தும் பொதுவான வானொலித் தொடர்பாடல்களைக் கடத்துவதற்கும் பெறுவதற்கும்; அத்துடன்

(ஐ) கப்பல்களுக்கிடையேயான தொடர்பாடல்களைக் கடத்துவதற்கும் பெறுவதற்கும்.

7. (1) ஒவ்வொரு கப்பலுக்கும் அதன் உட்கருதுப்பட்ட கடற்பயணம் பூராகவும் 6 ஆம் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட பணிசார் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற ஆற்றலுடையனவும், மற்றும் 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் விலக்களிக்கப்பட்டாலொழிய சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 7 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றனவும், அத்துடன் தோதானவாறு அதன் உட்கருதுப்பட்ட கடற்பயணத்தின்போது அது கடந்துசெல்லும் கடற்பரப்புக்காக அல்லது கடற்பரப்புகளுக்காகச் சமவாயத்தின் அத்தியாயம் IV இன் ஒன்றில் 8, 9, 10 அல்லது 11 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றனவுமான வானொலி நிறுவுகைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு வானொலி நிறுவுகையும் ;

(அ) பொறிமுறை, மின்சார அல்லது வேறு தோற்றுவாயைக் கொண்ட தீங்குவிளைவிக்கும் தலையீடெதுவும் அதன் முறையான பயன்பாட்டைப் பாதிக்காமலும், இலத்திரனியற்காந்த ஒத்தியல்வையும் ஏனைய சாதனங்களுடனும் முறைமைகளுடனும் தீங்குவிளைவிக்கும் இடைச்செயற்பாட்டைத் தவிர்ப்பதனையும் உறுதிப்படுத்தும் வகையிலும் அவ்வாறு இடப்படுதல் வேண்டும்;

(ஆ) உச்சளவுக்கு இயன்றதாகவுள்ள காப்பு மட்டத்தையும் தொழிற்பாடுசார் கிடைக்கக்கூடியதன்மையையும் உறுதிப்படுத்தும் வகையில் அவ்வாறு இடப்படுதல் வேண்டும்;

(இ) நீர், தட்பவெப்ப நிலைக்கோடிகள் மற்றும் வேறு பாதகமான சூழல்சார் நிலைமைகளின் தீங்குவிளைவிக்கும் விளைவுகளுக்கெதிராகப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) வானொலி நிறுவுகையைத் தொழிற்படுத்துவதற்கு வானொலிக் கட்டுப்பாடுகளின் போதிய ஒளியேற்றுகைக்காக, மின்சக்தியின் பிரதான மற்றும் அவசரகால மூலங்களுக்குப் புறம்பாக நம்பகமான, நிரந்தரமான முறையில் ஒழுங்கேற்பாடு செய்யப்பட்ட மின்சார வெளிச்சமிடுகை வழங்கப்பட்டதாதல் வேண்டும்; அத்துடன்

(உ) வானொலி நிறுவுகையின் பயன்பாட்டுக்கு ஏற்புடையவாறாக அழைப்புச் சைகை, கப்பல் நிலைய அடையாளம் மற்றும் வேறு குறியீடுகள் என்பன தெளிவாக அடையாளமிடப்பட்டனவாதல் வேண்டும்.

8. சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 7 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதுடன் மேலதிகமாக, புறநீங்கலாகக் கடற்பரப்பு A1 இல் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு கப்பலுக்கும் சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 8 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க வானொலி நிறுவுகையொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

9. சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 7 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதுடன் மேலதிகமாக, கடற்பரப்பு A1 றுக் கப்பால் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள, ஆனால் கடற்பரப்பு A2 இனுள் இருக்கின்ற ஒவ்வொரு கப்பலுக்கும் சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 9 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க வானொலி நிறுவுகைகளும் சாதனங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

10. சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 7 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதுடன் மேலதிகமாக, கடற்பரப்புகள் A1 மற்றும் A2 டுக்கப்பால் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள, ஆனால் கடற்பரப்பு A3 றினுள் இருக்கின்ற ஒவ்வொரு கப்பலுக்கும் சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 10 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க வானொலி நிறுவுகைகளும் சாதனங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

11. சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 7 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதுடன் மேலதிகமாக, எல்லாக் கடற்பரப்புகளிலும் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு கப்பலுக்கும் சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 11 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க வானொலி நிறுவுகைகளும் சாதனங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

**பாகம் III**

**காவல்களும் வலு மூலங்களும்**

12. (1) ஒவ்வொரு கப்பலும் கடலில் இருக்கையில், சமவாயத்தின் அத்தியாயத்தின் IV இன் 12 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்கத் தொடர்ச்சியான காவலொன்றைப் பேணுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கப்பலும் கடலில் இருக்கையில், கப்பலானது, எந்தக் கடற்பரப்பில் நீர்வழிப்போக்குவரத்தில் உள்ளதோ அந்தக் கடற்பரப்புக்காகக் கடலோரக் காப்புத் தகவல் ஒலிபரப்பப்படும் தோதான அலைவரிசையின் மீது அல்லது அலைவரிசைகளின் மீது அத்தகைய தகவல் ஒலிபரப்பப்படுவதற்காக வானொலிக் காவலொன்றைப் பேணுதல் வேண்டும்.

13. கப்பலானது கடலில் இருக்கையில், சமவாயத்தின் அத்தியாயம் IV இன் 13 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க வானொலி நிறுவுகைகளைத் தொழிற்படுத்துவதற்கும் வானொலி நிறுவுகைகளுக்காக வலுவின் ஓர் ஒதுக்க மூலத்தின் அல்லது மூலங்களின் பாகமாகப் பயன்படுத்தப்பட்ட எவையேனும் மின்கலன்களுக்கு மின்னேறுவதற்கும் போதிய மின்வலுவின் வழங்கலொன்று எல்லா நேரங்களிலும் கிடைக்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும்.

**பாகம் IV**

**செயல்நிறைவேற்ற நியமங்களும் பேணுகைத் தேவைப்பாடுகளும்**

14. (1) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகவுள்ள எல்லாச் சாதனங்களும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வகையொன்றினவாகவிருத்தல் வேண்டும். அத்தகைய சாதனங்கள் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்குக் குறைவானவையாகவிராத தோதான செயல்நிறைவேற்ற நியமங்களுக்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இனைப் பின்பற்றி, பணிப்பாளர் தலைமையதிபதி, ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் (RO) அல்லது ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கரையோரக் காவலாளரினால், ஐக்கிய இராச்சியத்திலுள்ள கடலோரக் கரையோரக் காவலர் முகவராண்மையினால் அல்லது யப்பானிய கடலோர நிருவாகத்தினால் அளிக்கப்பட்ட சாதன அங்கீகாரங்களை, அவ்வங்கீகாரங்கள் முழுமையாகச் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக் கிணங்கவிருப்பின், ஏற்றுக்கொள்கின்றார். ஐரோப்பிய ஒன்றியக் கடல்சார் சாதனப் பணிப்புரைச் சான்றுப்படுத்துகை நடவடிக்கை முறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள சாதனங்களையும் பணிப்பாளர் தலைமையதிபதி ஏற்றுக்கொள்வார்.

15. (1) விரிவான மீள அளவுத்திருத்தல் அல்லது மீளச்சரிப்படுத்தல் இன்றிப் பிரதான கூறுகள் உடனடியாக மாற்றீடு செய்யப்படமுடியுமான வகையில் சாதனமொன்று அவ்வாறு வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏற்புடையதாகுமிடத்து, சாதனமொன்று, சோதனை மற்றும் கப்பலில் பேணுகை நோக்கங்களுக்காக உடனடியாக அணுகத் தக்கதாகவிருக்கும் வகையில் அவ்வாறு நிர்மாணிக்கப்பட்டு நிறுவப்படுதல் வேண்டும்.

(3) ஒழுங்கமைப்பின் விதப்புரைகளைக் கணக்கிற்கெடுத்து, சாதனங்கள் தகுந்தமுறையில் தொழிற்படுத்தப்பட்டுப் பேணப்படு வதனை இயலச்செய்வதற்குப் போதிய தகவல் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) சாதனங்கள் பேணப்படுவதனை இயலச்செய்வதற்குப் போதிய கருவிகளும் உதிரிப்பாகங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட வானொலிச் சாதனங்கள், 6 ஆம் ஒழுங்குவிதியின் குறித்துரைக்கப்பட்ட பணிசார் தேவைப்பாடுகள் கிடைக்கக்கூடியமைக்கு ஏற்பாடுசெய்வதற்கும் மற்றும் அத்தகைய சாதனங்களின் விதந்துரைக்கப்பட்ட செயல்நிறைவேற்ற நியமங்களை எதிர்கொள்வதற்கும் பேணப்படுதல் வேண்டும்.

(6) கடற்பரப்புகள் A1 மற்றும் A2 இல் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களில், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, சாதனங்களின் இரட்டிப்பு, கரையில் அமைந்துள்ள பேணுகை அல்லது கடலில் இலத்திரனியற் பேணுகை ஆற்றல், அல்லது இவற்றின் சேர்க்கையொன்று போன்ற அத்தகைய முறைகளைப் பயன்படுத்துவதன் மூலமேனும் கிடைக்கக்கூடியதன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

*(7) கடற்பரப்புகள் A3 மற்றும் A4 இல் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ள கப்பல்களில், ஒழுங்கமைப்பின் விதப்புரைகளைக் கணக்கெடுத்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, சாதனங்களின் இரட்டிப்பு, கரையில் அமைந்துள்ள பேணுகை அல்லது கடலில் இலத்திரினியற் பேணுகை ஆற்றல் போன்ற ஆகக் குறைந்தது இரு முறைகளின் சேர்க்கையொன்றைப் பயன்படுத்துவதன் மூலமேனும் கிடைக்கக்கூடியதன்மை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.*

*(8) ஆறாம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட எல்லாப் பணிசார் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவற்கு வினைத்திறனான தொழிற்பாட்டு நிலைமையில் சாதனங்களைப் பேணுவதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டிய அதேவேளையில், 6 (ஏ) என்னும் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்ட பொதுவான வானொலித் தொடர்புகளை வழங்குவதற்காகச் சாதனங்களின் பிறழ்பணியாற்றுகை, கப்பலொன்றைக் கடலிற்செல்லத் தகுதியற்றதாக்குவதாக அல்லது பழுதுபார்த்தல் வசதிகள் உடனடியாகக் கிடைக்காதுள்ள துறைமுகங்களில் கப்பலைத் தாமதப்படுத்துவதற்கான காரணமொன்றாகக் கருதப்படுதலாகாது ; ஆயின், கப்பலானது எல்லா இடர்ப்பாட்டு மற்றும் காப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆற்றலுடையதாகவிருத்தல் வேண்டும்.*

*(9) செய்மதி அவசர நிலை – வானொலி வெளிச்சங்களைச் சுட்டிக்காட்டுபவை –*

*(அ) கீழே குறித்துரைக்கப்பட்டவாறான கால இடைவெளிகளில், தொழிற்பாடுசார் அலைவரிசைகள், குறியீடுசெய்தல் மற்றும் பதிவுசெய்தல் என்பவற்றின்மீதான வெளியேற்றுகையைச் செவ்வைபார்த்தல் மீதான விசேட அழுத்தத்துடன், தொழிற்பாடுசார் வினைத்திறனின் எல்லா அம்சங்களுக்காகவும் வருடாந்தம் பரீட்சிக்கப்படுதல் வேண்டும் :-*

(i) *பயணிக் கப்பல்களின்மீது, பயணிக் கப்பல் காப்புச் சான்றிதழ் முடிவுறும் திகதிக்கு முன்னர் 3 மாதங்களினுள்; அத்துடன்*

(ii) *சரக்குக் கப்பல்களின்மீது, சரக்குக் கப்பற் காப்புச் சான்றிதழ் முடிவுறும் திகதிக்கு முன்னர் 3 மாதங்களினுள், அல்லது அதன் ஆண்டு நிறைவுக்கு முன்னர் அல்லது பின்னர் 3 மாதங்களினுள்.*

*பரீட்சிப்பானது ஒரு கப்பலில், அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சிப்பு நிலையமொன்றில் நடாத்தப்படலாம்; அத்துடன்*

*(ஆ) ஐந்தாண்டுகளை விஞ்சாத கால இடைவெளிகளிலான பேணுகைக்கமைய, ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கிணங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கரையில் அமைந்துள்ள பேணுகைச் செயலிடமொன்றில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.*

*16. இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற எல்லா இலங்கைக் கப்பல்களிலும், கப்பற்றலைவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர், வழமையாக 17 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் தகைமைபெற்ற ஆள், கப்பலானது கடலில் இருக்கையில், பணிப்பாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்ட நடைமுறைப்படுத்தல் நியமங்களினால் விதித்துரைக்கப்பட்டவாறு தோதான பரீட்சிப்புகளை நிறைவேற்றுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட வானொலி நிறுவுகைகளுள் எவையும் தொழிற்படு நிலைமையில் இராதிருப்பின், பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஆள் கப்பற்றலைவருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் கீழே 18 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட வானொலிப் பேரேட்டில் குறைபாடுகளின் விபரங்களைப் பதிதலும் வேண்டும்.*

## பாகம் V

### வானொலி ஆளணியினரும், வானொலிப் பதிவேடுகளும், நிலையை நாளதுவரையாக்குதலும்

*17. (1) ஒவ்வொரு கப்பலும், இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் அல்லது (4) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறான நோக்கங்களுக்காக இடர்ப்பாட்டு மற்றும் காப்பு வானொலித் தொடர்பாடல்களுக்காகத் தகைமைபெற்ற ஆளணியினரைக் கொண்டு செல்லுதல் வேண்டும். அத்தகைய ஆளணியினர், தோதானவையென வானொலி ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட சான்றிதழ்களை வைத்திருப்போராகவிருத்தல் வேண்டும்.*

*(2) (அ) பயணிக் கப்பல்களின் விடயத்தில், மேலே உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பிடப்பட்டவாறான ஆகக் குறைந்தது அத்தகைய ஆள் ஒருவரேனும் இடர்ப்பாட்டுச் சம்பவங்களின்போது வானொலித் தொடர்பாடல் கடமைகளை மட்டுமே மேற்கொள்வதற்குக் கப்பற்றலைவரினால் குறித்தளிக்கப்படுதல் வேண்டும்.*

(ஆ) மற்றெல்லாக் கப்பல்களினதும் விடயத்தில், மேலே உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய ஓராள் இடர்பாட்டுச் சம்பவங்களின்போது வானொலித் தொடர்பாடல்களுக்கான ஆரம்பப் பொறுப்பைக் கொண்டிருப்பதற்குக் கப்பற்றலைவரினால் பெயர்குறிக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) கடற்பரப்பு A1 இல் வியாபாரஞ்செய்யும் கப்பல்களில், மேலே உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பிடப்பட்டவாறு தகைமைபெற்ற ஆள், வானொலி ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட ஆகக்குறைந்தது உலகளாவிய கடலோர இடர்ப்பாட்டு மற்றும் காப்பு முறைமை மட்டுப்படுத்தப்பட்ட தொழிற்படுத்துநர் சான்றிதழையேனும் மற்றும் 2016, ஒற்றோபர் 4 ஆந் தேதிய 1987/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சி நியமங்கள், சான்றுப்படுத்துகை மற்றும் காவற்காத்தல்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட உலகளாவிய கடலோர இடர்ப்பாட்டு மற்றும் காப்பு முறைமை மட்டுப்படுத்தப்பட்ட வானொலித் தொழிற்படுத்துநராகத் தகுதிச் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(4) கடற்பரப்புக்கள் A2, A3 மற்றும் A4 இல் வியாபாரஞ் செய்கின்ற கப்பல்களில், மேலே உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பிடப்பட்டவாறு தகைமைபெற்ற ஆள், வானொலி ஒழுங்கு விதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட ஆகக் குறைந்தது உலகளாவிய கடலோர இடர்ப்பாட்டு மற்றும் காப்பு முறைமை பொதுத் தொழிற்படுத்துநர் சான்றிதழையேனும் மற்றும் 2016 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கடலோடிகளுக்கான பயிற்சி நியமங்கள், சான்றுப்படுத்துகை மற்றும் காவற்காத்தல்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட உலகளாவிய கடலோர இடர்ப்பாட்டு மற்றும் காப்பு முறைமை வானொலித் தொழிற்படுத்துநராகத் தகுதிச் சான்றிதழொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

18. (1) உலகளாவிய கடலோர இடர்ப்பாட்டு மற்றும் காப்பு முறைமை வானொலிப் பேரேடு எனவழைக்கப்படும் பதிவேடொன்று ஒவ்வொரு கப்பலிலும் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பின்வரும் தகவல் அப்பேரேட்டில் பதியப்படுதலும் வேண்டும் :-

(அ) தொடர்பாடல்கள் செய்யப்பட்ட நேரத்துடன் சேர்த்து கப்பலின் ஏதேனும் இடர்ப்பாடு, அவசரநிலைமை மற்றும் காப்புப் போக்குவரத்துத் தொடர்பான எல்லா வானொலித் தொடர்பாடல்களினதும் சுருக்கமொன்று;

(ஆ) தொடர்பாடல்களைக் கையாளுகின்ற எல்லா ஆட்களினதும் சான்றுப்படுத்துகை விபரங்களுட்பட அவர்களின் பெயர்கள்;

(இ) கப்பல் தொடர்பான எல்லா முக்கியச் சேவைச் சம்பவங்களும் அவை இடம்பெற்ற நேரமும்;

(ஈ) கப்பலின் நாளாந்த நிலை; அத்துடன்

(உ) 16 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தோதான பரீட்சிப்புகளினதும் செவ்வை பார்த்தல்களினதும் தேதியும், நேரமும், விபரங்களும்.

(2) கப்பற்றலைவர் வானொலிப் பேரேட்டிலுள்ள ஒவ்வொரு நாளுக்குமுரிய பதிவீடுகளைச் சோதனைசெய்து கையொப்பமிடுதல் வேண்டும்.

19. (1) ஓர் இடர்ப்பாட்டு எச்சரிக்கை விடுக்கப்படுகையில் கப்பலின் நிலையை உட்படுத்துவதற்கு ஆற்றலுடைய இருவழித் தொடர்பாடற் சாதனம் எக்கப்பலில் வழங்கப்படுகின்றதோ அக்கப்பலுக்கு இவ்வொழுங்குவிதி ஏற்புடைதாகவுள்ளது.

(2) நீர்வழிப்போக்குவரத்துப் பெறுகருவியொன்று ஒரு கப்பலில் நிறுவப்படின், ஓர் இடர்ப்பாட்டு எச்சரிக்கை விடுக்கப்படுகையில் கப்பலின் நிலையைக் உட்படுத்த முடியுமான வகையில், பெறுகருவியானது, கப்பலின் நிலையைக் கப்பலிலுள்ள இருவழித் தொடர்பாடல் சாதனத்துக்கு தன்னியக்கமான முறையில் வழங்குதல் வேண்டும்.

(3) நீர்வழிப்போக்குவரத்துப் பெறுகருவியெதுவும் ஒரு கப்பலில் நிறுவப்பாவிடின், கபபலின் நிலையும் நேரமும் இருவழித் தொடர்பாடல் சாதனத்தினால் எந்நேரத்திலும் கடத்தப்படமுடியுமானவையாகவிருக்கும் வகையில், கப்பல் ஒரு கடற்பயணத்தில் ஈடுபட்டிருக்கையில் நான்கு மணித்தியாலங்களை விஞ்சாத காலஇடைவெளிகளில், கப்பலின் நிலையும், கப்பல் எந்நேரத்தில் அந்நிலையிலுள்ளதோ அந்நேரமும் கையெழுத்துமூலம் நாளது வரையாக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

### பொது ஏற்பாடுகள்

*20. (1)* வானொலி ஒழுங்குவிதிகளுக்கிணங்கக் கப்பலொன்றுக்குக் கப்பல் நிலைய வானொலி உரிமமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

*21.* கப்பல் நிலைய வானொலி உரிமமொன்று வலுவிலிருந்தாலொழிய, கப்பலொன்று, இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்திற்கு அல்லது அதிலிருந்து அல்லது ஏதேனும் இடத்திற்கு அல்லது அதிலிருந்து கடற்பயணத்தின்மீது கடலுக்குச் செல்லுதலாகாது என்பதுடன் இலங்கைக் கப்பலொன்று சர்வதேசக் கடற்பயணமொன்றை மேற்கொள்ளுதலுமாகாது.

*22.* பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழினுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்காக அத்தகைய நடைமுறைப்படுத்துகின்ற நியமங்களை வழங்கலாம்.

*23.* சமவாயத்தின் IV ஆம் அத்தியாயத்திலுள்ள அடிக்குறிப்புகளும் அத்தகைய அடிக்குறிப்புகளினால் குறிப்பீடு செய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வொழுங்குவிதிகளின் பாகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*24.* இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிபந்தனை காரணமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம் விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல், ஆய்வு செய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.

*25.* இவ்வொழுங்குவிதிகளில் :-

"சரக்குக் கப்பல்" என்பது, ஒரு பயணிக் கப்பலல்லாத ஏதேனும் கப்பல் என்று பொருளாகும்;

"சமவாயம்" என்பது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் வமவாயம், காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட வாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் மற்றும் அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தம் என்று பொருளாகும்;

"உகஇகாமு" என்பது, உலகளாவிய கடலோர இடர்ப்பாட்டு மற்றும் காப்பு முறைமை என்று பொருளாகும்;

"MF (நடுத்தர அலைவரிசை)" என்பது, 300KHZ டை விஞ்சுகின்றதும் 3000KHZ டை விஞ்சாததுமான அலைவரிசை உருவெளி வடிவம் என்று பொருளாகும்;

"ஒழுங்கமைப்பு" என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"வானொலி ஒழுங்குவிதிகள்" என்பது, காலத்துக்குக்காலம் வலுவிலுள்ளவாறு சர்வதேசத் தொலைத்தொடர்புச் சமாசத்தின் அமைப்பு விதிக்கும் சமவாயத்துக்கும் இணைக்கப்பட்ட, அல்லது இணைக்கப்பட்டதாகக் கருதப்பட்ட வானொலி ஒழுங்குவிதிகள் என்று பொருளாகும்;

" ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" என்பது, ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு களுக்கான சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"பயணிக் கப்பல்" என்பது, பன்னிரெண்டு பயணிகளுக்கு மேற்பட்டோரை ஏற்றிச்செல்கின்ற ஒரு கப்பல் என்று பொருளாகும்;

"கடற்பரப்பு A1" என்பது, ஆகக் குறைந்தது எந்த ஒரு மிக்க உயர் அலைவரிசைக் கரையோர நிலையத்திலேனும் தொடர்ச்சியான எண்ணிமைத் தெரிவுமுறை அழைப்பு எச்சரிக்கையிடுதல் கிடைக்கக்கூடியதாகவுள்ளதோ அந்த ஒரு மிக்க உயர்

அலைவரிசைக் கரையோர நிலையத்தின் வானொலித் தொலைபேசி மேலெல்லைக்குள்ளான ஒரு கடற்பரப்பு என்று பொருளாகும்;

"கடற்பரப்பு A2" என்பது, ஏதேனும் கடற்பரப்பு A1 தவிர்ந்ததாக ஆகக் குறைந்தது எந்த ஒரு நடுத்தர அலைவரிசைக் கரையோர நிலையத்திலேனும் தொடர்ச்சியான எண்ணிமைத் தெரிவுமுறை அழைப்பு எச்சரிக்கையிடுதல் கிடைக்கக்கூடியதாகவுள்ளதோ அந்த ஒரு நடுத்தர அலைவரிசைக் கரையோர நிலையத்தின் வானொலித் தொலைபேசி மேலெல்லைக்குள்ளான ஒரு கடற்பரப்பு என்று பொருளாகும்;

"கடற்பரப்பு A3" என்பது, ஏதேனும் கடற்பரப்பு A1 அல்லது A2 தவிர்ந்ததும், அதில் தொடர்ச்சியான எச்சரிக்கையிடுதல் கிடைக்கக்கூடியதாகவுள்ளதும், சர்வதேச கடலோரச் செய்மதி புவியியற்சார் நிலையச் செய்மதியொன்றின் மேலெல்லைக் குள்ளானதுமான ஒரு கடற்பரப்பு என்று பொருளாகும்;

"கடற்பரப்பு A4" என்பது, ஏதேனும் கடற்பரப்பு A1, கடற்பரப்பு A2 அல்லது கடற்பரப்பு A3 தவிர்ந்தவொரு கடற்பரப்பு என்று பொருளாகும்;

VHF (மிக்க உயர்வான அலைவரிசை)" என்பது, 30 MHZ டை விஞ்சுகின்றதும் 300 MHZ டை விஞ்சாததுமான அலைவரிசை உருவெளிவடிவம் என்று பொருளாகும்.